**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

மார்ச் / ஏப்ரல் 2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான தேர்வு முடிவுகள் 20.05.2026 அன்று வெளியிடப்பட்டது. தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் தேர்வர்கள் வி டைத்தாள் ஒளி நகல் கோருதல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான விண்ணப்பங்கள் மாநிலம் முழுவதும் இருந்து பெறப்பட்டுள்ளது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் எண்ணிக்கையில் விடைத்தாள் நகல் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | மார்ச் / ஏப்ரல் 2025 | 52236 |
| இந்த ஆண்டு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | மார்ச் / ஏப்ரல் 2026 | 74862 |

விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பித்த தேர்வர்கள் 16.06.2026 அன்று முதல் விடைத்தாள் நகலினை பாட வாரியாக பல்வேறு கட்டங்களாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification–ஐ Click செய்தவுடன் SSLC Examination என்ற வாசகத்தினை Click செய்தவுடன் **"SSLC, March/April 2026 – Answer Script Scanned Copy Download"** என்ற வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வியக்ககத்தால் இணையதளத்தில் வெளியிடப்படும் பாடவாரியான விடைத்தாள் ஒளிநகல் பதிவிறக்கம் செய்திடும் நாட்களின் விவரங்களை இவ்வலுவலகத்தின் மூலம் அவ்வப்போது செய்தி குறிப்பாக ஒரு நாள் முன்னதாக வெளியிடப்படும் எனவும், மேலும், இவ்விவரத்தை www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

...2...

விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்த பின்னர் தேர்வர்கள் மறுமதிப்பீடு / மறுகூட்டல் படிவத்தையும் மேற்காண் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்ய விரும்பினால் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகத்தில் 17.06.2026 முதல் 23.06.2026–க்குள் மறு கூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை பணமாக செலுத்தி விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மறுக்கூட்டல் மற்றும் அல்லது மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை ஒப்படைத்து அதற்குரிய கட்டண தொகையை பணமாக செலுத்தி விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

**மறுமதிப்பீடு**

பாடம் ஒவ்வொன்றிக்கும் ரூ.505/–

**மறு கூட்டல்**

பாடம் ஒவ்வொன்றிற்கும் ரூ.205/–

மேலும், 16.06.2026 அன்று பின்வரும் பாடங்களின் விடைத்தாள் ஒளிநகலினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| பாடக்குறியீடு | பாடம் |
|---|---|
| 001 | தமிழ் |
| 005 | கணிதம் |
| 012 | விருப்பமொழிப்பாடம் |

விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்தல் மற்றும் மறுகூட்டல்/மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**ஒம்/–**

**இயக்குநர்**

**இடம் : சென்னை – 6**

**நாள் : 15.06.2026**